DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | CC. No. 250 of 2022 |
| Deposition of witness for | : | PW7 |
| Name | : | திரு. கார்த்திக் |
| Father's Name | : | Govindappia |
| Village | : | Murudhandapalli |
| Taluk | : | Shoolagiri |
| District | : | Krishnagiri |
| Profession | : | Auto Driver |
| Age | : | 29 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 09th day of August 2024.

Accused present.

முதல் விசாரணை :-

நான் சூளகிரி தாலுகா, மருதாண்டபள்ளி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். ஆட்டோ டிரைவராக தொழில் செய்து வருகிறேன். வழக்கு விபத்தில் இறந்து போனவர் என்னுடைய அக்கா ஜமுனா ஆவார். கடந்த 07.08.2009 அன்று காலை 06.50 மணியளவில் சூளகிரியில் உள்ள எனது வீட்டில் இருந்த போது, எனக்கு தெரிந்த ஒருவர் போன் மூலம் விபத்து குறித்து தகவல் தெரிவித்தார். பின்னர் நான் விபத்து நடந்த இடமான தளவாய்ப்பள்ளி, முனியப்பன் கோவில் அருகே நானும் எனது தகப்பனாரும் சென்றோம். எனது அக்கா ஜமுனா இரு சக்கர வாகனத்தில் வந்த போது, ஈச்சர் வண்டி மோதி விபத்து ஏற்பட்டதாக கேள்விப்பட்டேன். சம்பவ இடத்தில் இரு சக்கர வாகனமும் ஈச்சர் வண்டியும் மோதிக் கிடந்தது. நான் சம்பவ இடம் செல்வதற்கு முன்பே ஆம்புலன்ஸில் எனது அக்காவை ஏற்றி கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று விட்டார்கள். பின்னர் சிகிச்சை

பலனளிக்காமல் ஜமுனாவும் அவரது மகன்கள் வேலன் என்ற வேல்முருகன் மற்றும் வெங்கடேசன் ஆகியோர் சிகிச்சை பலனளிக்காமல் இறந்து போய் விட்டார்கள். பின்னர் நடந்த பிரேத விசாரணையின் போது நான் உடன் இருந்தேன். இவ்வழக்கு சம்பந்தமாக குருபரப்பள்ளி போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். சாட்சியிடம் குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டது.

<u>மறு விசாரணை :-</u>

இல்லை.

ஒம் /- திரு.ஆர். சாமுவேல் பெஞ்சமின்
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணகிரி.